புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
ज्ञान - विज्ञानं विमुक्तये
UGC Approved Journals
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
ISSN: 2456-821X
Vol:07, Issue: 02 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது மே 2023 – வெளியிடப்பட்டது ஜூன் 2023
SACRED HEART RESEARCH PUBLICATIONS
June-2023

# அஞ்ஞாடியில் ஆண்டி, மாரி வாழ்வில் நட்புக்காலமே வசந்தகாலம்

**முனைவர் பட்ட ஆய்வாளர்: த .சுதா**
தமிழ்த்துறை
அறிவியல் மற்றும் கலையியல் கல்லூரி
எஸ்.ஆர்.எம். அறிவியல் மற்றும்
தொழில்நுட்பக் கல்வி நிறுவனம்
காட்டாங்குளத்தூர்- 603203

**நெறியாளர்:** முனைவர் ந. இரஞ்சன்
உதவிப் பேராசிரியர் தமிழ்த்துறை
அறிவியல் மற்றும் கலையியல் கல்லூரி
எஸ்.ஆர்.எம். அறிவியல் மற்றும்
தொழில்நுட்பக் கல்வி நிறுவனம்
காட்டாங்குளத்தூர்- 603203

**ஆய்வுச் சுருக்கம்**

கரிசல் வட்டாரத்து வாழ்க்கையின் நுட்பங்களைத் தனது எழுத்தில் வெளிப்படுத்திய புகழ் பெற்ற எழுத்தாளர்களுள் பூமணியும் ஒருவர். இவர் முதன்முதலில் எழுதிய ‘அறுப்பு’ என்னும் சிறுகதை தாமரை இதழில் 1971 இல் வெளிவந்துள்ளது. இதனைத் தொடர்ந்து பல்வேறு புதினங்களைப் படைத்துள்ளார். பிறகு, வெக்கை, நைவேத்யம், வாய்க்கால், வரப்புகள், அஞ்ஞாடி, மற்றும் கொம்மை ஆகியனவாகும். அமவர் படைப்புகளில் சிறப்பு வாய்ந்த நூல்களுள் அஞ்ஞாடியும் ஒன்று. ‘அஞ்ஞாடி’ புதினத்திற்கு 2014 ஆம் ஆண்டு சாகித்திய அகாதெமி விருது வழங்கப்பட்டது. பல்வேறு உறவு முறைகள் இருந்தாலும் எந்தவொரு எதிர்பார்ப்புமின்றி கிடைக்கக்கூடிய தாய்க்கு நிகரான உறவு ஒன்று உலகத்தில் இருக்கிறது என்றால், அது நட்பு மட்டுமே. அத்தகைய நட்புறவானது அஞ்ஞாடியில் பரந்து காணப்படுகிறது. இதில் பல்வேறு நட்பு உறுதியாகப் பேசப்பட்டாலுங்கூட, ஆண்டி, மாரியின் நட்புதான் முதன்மை இடம் வகிக்கிறது. குடும்பர் சமூகத்தைச் சேர்ந்த ஆண்டி, வண்ணார் சமூகத்தைச் சேர்ந்த மாரி இவர்கள் இருவரும் வேறு வேறு சமூகத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் கூட, சிறு வயதிலிருந்து இறக்கும் வரையிலும் சமூக வேறுபாடு இல்லாமல் நட்பு வைத்திருந்தனர். ஆண்டி, மாரியின் நட்புணர்வுத் திறனைக் கட்டமைப்பதாக இவ்வாய்வுக் கட்டுரை அமைகிறது.

## முன்னுரை

ஒருவர் வாழ்வில் தானே தெரிந்து தேர்ந்தெடுக்கும் உறவு “நட்பு” இவ்வுறவில் மிகுந்த நெருக்கம் உண்டு. நண்பர்கள் ஒருவருக்கொருவர் சிந்தனைகளை, உணர்வுகளைத் தங்களுக்குள் பகிர்ந்து கொள்கின்றனர். நாடு, இனம், மொழி, மதம், பால் என்ற பாகுபாடெல்லாம் நட்பிற்குக் கிடையாது. நண்பர் என்பவர் தன் நலம் விரும்பாமல், எந்தவித எதிர்பார்ப்பும் இல்லாமல் அன்பு செலுத்துவர். நண்பர்கள் இன்பதுன்ப காலத்துப் பிரியாது, ஒருவருக்கொருவர் உதவி, ஒருவரால் ஒருவர் பயன் பெற்றுக் கூடி வாழ்வார். எப்போது நண்பர்களானோம் என்பது தெரியாமலேயே சிறு வயதில் ஏற்பட்ட “நட்பு” ஆயுள் முழுக்கத் தொடர்ந்து வருவதும் உண்டு. நட்பில் உயர்ச்சி, மகிழ்ச்சி, பயன் இம்மூன்றுமே இருக்கும். பெரும்பாலும் நம்மைச்சுற்றி இருப்பவர்கள் எல்லோரையும் நாம் நண்பர்களாக ஏற்பதில்லை. சிலரை மட்டுமே உயிர் நண்பராக மதிக்கிறோம். எனவே அவர்களிடம் மட்டுமே ரகசியங்களைப் பகிர்கிறோம். நமக்கான ஆறுதலையும் நம்பிக்கையும் தேடுகிறோம். அத்தகைய ஆறுதல் மாரியிடமிருந்து ஆண்டிக்கோ, ஆண்டியிடமிருந்து மாரிக்கோ அல்லது இருவருக்குமே கிடைத்துள்ளதா? என்பது அறியப்பட வேண்டியிருக்கிறது.

**ஆய்வு நெறிமுறைகள்**

*இவ்வாய்வு பண்புசார் அணுகுமுறையில் வடிவமைக்கப்பட்டு, நூலாய்வு முறை கையாளப்பட்டுள்ளது. நூலாய்வில் ஆய்வுக்குத் தேவையான நூல்கள், கட்டுரைகள் தேர்ந்தெடுக்கப்பட்டு விளக்கவியல் அணுகுமுறையிலும், சமூகவியல் அணுகுமுறையிலும், மற்றும் ஒப்பீட்டு அணுகுமுறையிலும் தரவுகள் சேகரிக்கப்பட்டுள்ளன. எனவே தரவுகள் முழுமையாகச் சேகரிக்கப்பட்டு நிரல்படுத்தபட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.*

*நட்பு என்பது நல்லதோர் உறவு புனிதமானது. எனவே நட்பின் உயர்வுத் தன்மையை ஆய்வு செய்து தீர்மானிக்கும் நோக்கில் இந்தக் கட்டுரையின் பொருண்மை தேர்ந்தெடுக்கப்பட்டது.*

*எனவே அஞ்ஞாடி புதினத்தில் நட்பு சிறப்பிடம் பெறுகின்றது. தாய், தந்தை, கணவன், மனைவி என்ற உறவுகளுக்கு ஈடாகப் போற்றப்படுகின்ற உயர்வான உறவு நட்பு.*

**நட்பு என்பதன் விளக்கம்**

*நட்பு என்பதற்கு அகராதிகள் பல சொற்களை வகைப்படுத்திக் கூறியுள்ளன. "நண்பன், தோழன், கணவன்" என்று கழகத் தமிழ் அகராதி சுட்டுகின்றது.*

*(கழகப் புலவர் (பதி.)கழகத் தமிழ் அகராதி, ப.453)*

*இதன் மூலம் கணவனும் தன் மனைவியிடம் நட்பாக இருந்தால் அவர்களுடைய உறவு சிறப்பாக இருக்கும் என்பதை அறியமுடிகிறது.*

*நட்பு என்பதை,*

**நவில்தொறும் நூல்நயம் போலும் பயில்தொறும்**
**பண்புடை யாளர் தொடர்பு**.

*என்று திருவள்ளுவர் விளக்கம் தருகிறார். படிக்கப் படிக்க இன்பம் தரும் நூலின் சிறப்பைப் போல பழகப் பழக இன்பம் தரக்கூடியது பண்புடையவர்களின் "நட்பு" என்கிறார்.*

*(திருவள்ளுவர்-திருக்குறள், மாணிக்கம் அ ப.174)*

*நட்பு என்பது "அன்பு, ஒத்த கருத்து, நலன், அக்கரை முதலியவற்றின் அடிப்படையில் உறவினர் அல்லாதவருடன் கொள்ளும் உறவு" என்கிறது க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி. (எஸ். ராமகிருஷ்ணன்(பதி.) ப.791)*

*இவற்றின் மூலம் நட்பு என்பது உயர்வானதாகக் கருதப்படுகிறது.*

**நட்பின் தொடக்கம்**

***"ஆபத்தில் உதவுபவனே உண்மையான நண்பன்"***

*வழக்கில் உள்ள பழமொழி. ஆனால் அஞ்ஞாடி புதினத்தில் குறிப்பிடும் ஆண்டி, மாரி இவர்கள் இருவரின் நட்பும் இப்படிதான் தொடங்குகிறது. ஒரு நாள் ஓடை சேற்றில் மாட்டிக் கொண்ட ஆண்டி, முன்னும் பின்னும் நகர முடியாமல் தவிர்த்துக் கொண்டிருந்தான். தன்னை யாராவது காப்பற்ற வரமாட்டார்களா? என்று ஏங்கி அழுதுக்கொண்டிருந்தான். அந்த நேரம் பார்த்து கம்மாய் தரிசிலில் மேய்ச்சலுக்கு சென்ற தன்னுடைய கழுதைகளை ஓட்டிச் செல்லுவதற்காக வந்த மாரிதான் ஆண்டியைக் காப்பாற்றினான். அன்று முதல் இருவரும் நல்ல நண்பர்கள் ஆனார்கள். விடிந்ததிலிருந்து இரவு அடையும் வரை இருவரும் ஒருவரை விட்டு ஒருவர் பிரியமாட்டார்கள். ஆண்டிக் குடும்பரும், மாரி வண்ணாரும் நட்புடன் பழகுவது ஆண்டியின் அம்மாவான சண்டிவீரிக்குச் சிறிதும் பிடிக்கவில்லை. தன்னைவிட கீழ் நிலை சமூகத்தை சேர்ந்தவருடன் நட்பு வைத்திருப்பதைப் பார்த்து "நீ உழகிறதுக்குப் பிறந்தயா வெளுக்கிறதுக்குப் பிறந்தயா" என்று கூறி திட்டுவாள். சில நேரங்களில் அடியும் உதையும் கிடைக்கும். அவற்றை உடனே மறந்து விட்டு மாரியைத் தேடி ஓடிவிடுவான்.*

**நட்பின் வலிமை**

*ஆண்டிக்கும், மாரிக்கும் உள்ள நட்பை வலிமைப்படுத்துவதற்குக் கதைசொல்லும் திறனும் துணைபுரிந்தது. கதை சொல்லும் திறன் மாரியிடம் இல்லையென்றாலும் கூட இவர்கள் நல்ல நண்பர்களாகத்தான் இருந்திருப்பார்கள். ஏனென்றால் நட்பு என்பது எதையும் எதிர்பார்த்து வருவதில்லை. அவ்வாறு எதிர்பாராமல் ஓர் ஆபத்தில் உதவிய காரணத்தால்தான் இவர்கள் நல்ல நண்பர்கள் ஆனார்கள்.*

*ஒரே சமுகத்தைச் சேர்ந்தவர்கள் எவ்வாறு பழகுவார்களோ, அதை விட இவர்களின் நட்பு உயர்வாகவே உள்ளது. எனவே சாதி பேதமற்ற ஒரு முறையில் பழக்கம் இருப்பதைப் பதிவு செய்திருக்கிறார் இந்த ஆசிரியர்.*

***வீட்டு உணவும் காட்டு உணவும்***

*ஆண்டிக்குத் தன் வீட்டில் வகைவகையான உணவுகள் இருந்தாலும்கூட, தன் நண்பரோடு சேர்ந்து நண்பர் வீட்டு உணவு சாப்பிடும் பழக்கத்தை ஆண்டி பெற்றிருக்குமாறு ஒரு கதையைக் கதை மாந்தரை அமைத்திருப்பது மிகவும் சிறப்பு வாய்ந்தது.*

*சாதி என்பது மக்கள் செய்யும் தொழில் அடிப்படையில் அமைந்துள்ளது. தொழில்களின் தன்மை காரணமாகத் 'தூய்மை' 'தீட்டு' என வரையறை செய்தனர். அவ்வாறு சாதி வெறிகள் மிகுதியாகக் காணப்பட்ட காலத்திலும் கூட ஆண்டிக்கு மாரி வீட்டில் கிடைக்கும் பல வீட்டுக் கஞ்சிக்கும், முறுகச்சுட்ட கருவாடும்தான் அவனுக்கு அதிகமாக பிடிக்கும். எனவே இவர்களின் நட்பு வரவேற்க தக்கதாக இருக்கிறது.*

*தும்பைப் பூ பறித்து தேன் உறிஞ்சிக் குடிப்பார்கள். மாரி பக்கத்துத் தோடத்தில் இருக்கும் பூசணிக் கொழுந்தும் பிஞ்சும் பறித்து வந்து மசாலா வைத்து அரைத்துப் பக்குவமாக வத்க்கிச் சுடச்சுடத் தின்று கொண்டே ஆசை தீரப் பேசுவார்கள். கோரைக்கிழங்கு, திருட்டு மாம்பழங்களின் ருசி, மீன் வேட்டையோடு சேர்த்து நத்தை வேட்டையும் நடக்கும். ஆண்டி, மாரி இவர்கள் இருவரும் கிராமத்தில் அந்தந்த பருவங்களில் காடுகளில் கிடைக்கும் உணவுப் பொருள்களையே மிகுதியாக விரும்பி சாப்பிட்டனர். இவர்கள் காட்டு உணவிற்கே முக்கியத்துவம் கொடுத்தனர்.*

**நட்பின் புனிதம்**

*சாதி வேறுபாடு இல்லாமல் பழகும் நட்பில் தன் நண்பனை உறவினர்களோ வேறு யாராவதோ கேலி, கிண்டல் செய்தால் அவற்றைப் பார்த்து வருத்தப்பட்டுகின்ற மனம் இருக்கிறது இல்லையா? இது தான் ஒரு புனிதம். தன்னுடைய நட்பிற்குள் பிரச்சனை வராமல் பார்த்துக் கொள்ளவதுதான் புனிதமான நட்பாகும்.*

***"ஆண்டி வண்ணான் தோண்டி வண்ணான்***
***அடுத்தவீட்ல பேண்ட வண்ணான்"***

*(பூமணி, அஞ்ஞாடி, ப.13)*

*வண்ணார் சமூகத்தைச் சேர்ந்து மாரியுடன் ஆண்டி சேர்ந்து விளையாடுவதால், ஆண்டி சமூகத்தை சார்ந்த குடும்பர் சமூகத்தில் உள்ளவர்கள் ஆண்டியை பார்த்து நீ ஏன் வண்ணானாரப் பயலுடன் சேர்ந்து விளையாடுகிறாய் என்றுக் கேலி, கிண்டல் செய்கிறார்கள். அதனால் ஆண்டி தன்னைக் கேலி செய்வதைப் பார்த்து வருத்தப்படவில்லை. நண்பனுக்கு ஏற்படும் வருத்தத்தைத் தன்னுடைய வருத்தமாகக் கருதும் மனநிலையுடையவனாக ஆண்டியை, கதையாசிரியர் உருவாக்கிருக்கிறார்.*

*எனவே ஆண்டி,மாரி இருவரும் ஒரு நாள் பெரியோடையில் கழுதையுடன் விளையாடும் போது, குதிரை சவாரி போல், கழுதமேல சவாரி வைப்போம் என்று ஆண்டி சவாரிக்காக கழுதையின் மேல் ஏறி உட்கார்ந்துக் கொண்டு கழுதையின் காதுகளை வசமாகப் பிடித்துக் கொண்டான். மாரி கழுதையின் வாலை நோண்டிவிட்டான்.*

***"ஆன வாலப் புடிச்சுக் கரையேறலாம்***
***ஆட்டு வாலப் புடிச்சுக் கரையேற முடியுமா?"***

*(பூமணி, அஞ்ஞாடி. ப.135)*

*என்பது போலக் கோபம் கொண்டக் கழுதை மாரியின் மூஞ்சியில் பட்டென்று ஒரு உதை விட்டது. இதில் மாரிக்குத் தாடை "முன்னத்தம் பல் கழண்டுவிட்டது. ஆண்டிக்குக் கல்லில் அடிப்பட்டு கிண்ணிக் கழண்டுத் தொடையெலும்பு நெறிந்து விட்டது"*

***"ஒன்னால நான் கெட்டேன்***
***என்னால நீ கெட்ட"***

*(பூமணி, அஞ்ஞாடி. ப.884)*

*என்று ஆகிவிட்டது.*

**மன ஒற்றுமை**

*அடிப்பட்ட ஆண்டி,மாரி இருவரும் நடந்ததை இறக்கும் வரை யாரிடமும் கூறவில்லை. ஆண்டியின் அம்மா எவ்வளவோ கேட்டுப் பார்த்தாள் ஆனால் அவன் நடந்த உண்மையைச் சொல்லாமல் மறுத்துவிட்டான். அதற்கு காரணம் என்னவென்றால், மாரியுடன் சேர்ந்து விளையாடுவது ஆண்டியின் அம்மாவிற்கு ஏற்கனவே பிடிக்காது. நடந்ததை சொன்னால் இனி எப்போழுதுமே மாரியுடன் சேர்ந்து விளையாட விடமாட்டார்கள் என்பதை உணர்ந்து நடந்த உண்மையை மறைத்துவிட்டான். ஆண்டிக்கு உடைந்த கால்களை மட்டை வைத்துக் கட்டியும் மாவு கட்டுப் போட்டும் சடையப்பன் செட்டியார் சரி செய்துவிட்டார். மாரி ஓட்ட பல்லன் என்ற பெயருடனே திரிந்தான். இவர்களுடைய நட்பின் மூலம் மனம் ஒற்றுமையாகக் படைக்கப்பட்டிருப்பதை அறியமுடிகிறது. இந்த இடத்தில் இவர்கள் இருவரின் மனமும் ஒன்றுபட்டுச் செயல்படுவதை அறிய முடிகிறது.*

**"ஒருவர் பொறைஇருவர் நட்பு"**

*(பதுமனார் (தொகு.) நாலடியார். ப.119)*

*சமூகம் கட்டமைத்திருக்கிற சாதி அமைப்புகளில் உள்ள எளிய சாதியான வண்ணானோடு நட்பாகப் பழகாதே, என்று பலரும் சொல்வதை ஆண்டி கேட்கவில்லை, மாரி ஏன் தன்னைப் போல் இல்லை? மாரியோடு தான் ஏன் சரிசமமாகவும் நெருக்கமாகவும் பழகக்கூடாது என்ற கேள்விகள் ஆண்டிக்கு எந்தத் தருணத்திலும் தோன்றவில்லை. சாதி அமைப்பைக் காரணம் காட்டிச் சக மனிதர்களை உடல் ரீதியாகத் துன்புறுத்தக் கூடாது என்று நினைப்பவன் ஆண்டி.*

*எனவே இவர்கள் இருவரின் நட்பு சாதி வேறுபாடு இல்லாத நட்பு. இவர்கள் நல்ல நட்போடு இருந்ததால்தான் அவர்களின் குடும்பமும் நட்புறவோடு இருந்தது. நல்ல நட்புக்கு உதாரணமாக திகழ்வது ஆண்டி மாரியின் நட்பு.*

**"நிறைகுளமாக ததும்பியது"**

*(பூமணி, அஞ்ஞாடி- ப.828)*

*உண்மை நட்பில் அக்கரையும் அன்பும் எப்போதும் என்றென்றும் மாறாமல் இருக்கும். நண்பர்களிடம் சுயநலமில்லாமல் நடந்து கொள்ளக்கூடியதே உண்மை நட்பாகும். கதைப் போக்கின்படி ஆண்டிக்குத்தான் முதலில் திருமணம் நடக்கிறது. ஆண்டியின் வாழ்க்கைத் துணையாகக் கருப்பி வந்தாள். பெயர் தான் கருப்பி ஆனால் அழகாக இருப்பாள். கருப்பி வந்த உடன் ஆண்டிக்குப் பொறுப்பும் அதிகமாக வந்துவிட்டது. வேளாண்மையில் ஈடுபட ஆரம்பித்துவிட்டான். அவ்வாறு இருந்த போதிலும் ஆண்டியால் மாரியைப் பார்க்கமல் இருக்க முடியவில்லை. ஊரைச் சுற்றி நிலபுலன்கள் ஆண்டிக்கு இருந்தாலும் பூவரசமரத் தோட்டத்திற்கு செல்வதைத் தவிர வேறு எங்கும் செல்ல விரும்பமாட்டான் . ஏனென்றால் அங்குதான் மாரியின் வெளுப்புத்துறை உள்ளது. மாரி துணித் துவைக்கும் போது அலுப்புத் தெரியாமல் இருப்பதற்காக பாடிக்கொண்டே துணித்துவைப்பான். மாரி பாடும் பாட்டு ஆண்டிக்கு மிகவும் பிடிக்கும். மாரியின் பாட்டு கேட்க வேண்டும் என்பதற்காகவே அங்கு செல்வான்.*

*மாரிக்கும் சங்கடம் ஆண்டியை அடிக்கடிப் பார்க்க முடியவில்லையே என்று. கல்யாணம் முடிந்தால் இப்படித்தான் ஆகிவிடுமோ. கையும் காலும் குறுகுறுத்தன. சில நேரம் ஆண்டியைப் பார்ப்பதற்காகவே மாரி கஞ்சிக்குப் போவான். ஆண்டியைப் பார்த்ததும் கஞ்சிப் பானையை வைத்து விட்டு இருவரும் பேசிக்கொண்டிருப்பார்கள்.*

*ஆண்டி, மாரிக்கும் திருமணம் செய்து பார்க்கனும் என்று எண்ணினான். அதைப்போல் மாரிக்கு அனந்தியைத் திருமணம் செய்து வைத்துக் குடும்பமாக்கினான். ஆண்டி குணத்தில் மேலும் உயர்ந்த மனிதனாகவே ஆசிரியர் உருவாக்கியுள்ளார்.*

**நட்பின் சிறப்பு**

*பொதுவாக நட்பு என்பது நண்பர்கள் இருவர் மட்டும் நட்புக் கொள்வது சிறந்த நட்பு ஆகாது. அவர்களுக்குப் பின் அவர்களுடைய மனைவியர்களும் நட்புறவை வளர்த்துக் கொண்டும், மேலும் அவர்களுடைய பிள்ளைகளும் என்று, அடுத்தடுத்த தலைமுறைக்கு எடுத்துச் செல்வதுதான் நட்பின் சிறப்பாகும்.*

***"சான்றவர் கேண்மை சிதைவு இன்றாய் ஊன்றி,***
***வலி ஆகி பின்னும் பயக்கும்"***

*(மூவாதியார், ஐந்திணை எழுபது. ப.5)*

*என்பதிற்கு ஏற்ப இந்தப் புதினத்தில் ஆண்டி, மாரி இருவர் மட்டும் நட்பை வளர்த்துக்கொள்ளவில்லை அவர்களின் மனைவியரும் நட்பை வளர்த்துக்கொண்டனர். 'இவர்களின் நட்பில் அமாவாசை என்பது இல்லை, வளர்பிறை சந்திரனைப் போல் நாளுக்கு நாள் நட்பு வளர்ந்து கொண்டேதான் இருந்தது'.*

*'நட்பு வாழ்க்கையின் நங்கூரம் போன்றது' அது கப்பலை ஆழிப்பேரலையில் இழுத்துச்செல்லாதபடி காக்கும். அது போலதான் ஒரு நல்ல நண்பன் துன்பம் வராமல் காப்பான். அவ்வாறுத் துன்பம் வந்தாலும் அவனுக்குத் துணையிருப்பான். என்பதைப் போல் ஆண்டியும், மாரிக்கு துணையாக இருந்தான். ஒரு நாள் மாரிக்கு நெஞ்சுப் புகைச்சல் நோய் ஏற்பட்டுவிட்டது. இதனை அறிந்த ஆண்டி பதறியடித்து மாரியை பார்க்கப் போனான்.*

***"உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே***
***இடுக்கண் களைவதாம் நட்பு"***

*(மாணிக்கம் அ (பதி.)திருவள்ளுவர், திருக்குறள், ப.174)*

*என்பது போல ஆண்டி இந்த நோயைப் எப்படியாவது சரிசெய்து இவனை நடக்க வைக்கனும் என்று எண்ணி நாட்டு மருந்துகளான பழந்தின்னி வெளவால், புறா, மந்தி, முள்ளெலி, உடும்பு ஆகியவற்றைச் சேகரித்துச் சமைத்துக் கொடுத்தனர். ஆனால் இதில் பயனில்லை, ஏனென்றால் நோய் முற்றிவிட்டது.*

*இறக்கும் இறுதித் தருவாயில் மாரிக்கு ஆண்டியிடம் அதிகமாக பேசனும் போலிருந்தது. ஆண்டியை வரசொல்லிருந்தான். அவனைப் பார்த்ததும். மாரியால் சந்தோசம் தாங்கமுடியவில்லை மாரியின் மானசுப் பழையபடி ஓடியாடி திரிவது போல் சிறகடித்தது. எங்கெல்லாமோ போய் வந்தான். கண்களில் மின்னும் சிரிப்பு. இறுதியில் ஒரு கதையை ஆண்டியிடம் கூறிவிட்டு, "எங் கண்ணுக்குப் பின்னால குடும்பத்த நீங்கதான் ஆதரிக்கணும்". என்று கூறிவிட்டு இறந்து விட்டான் மாரி. ஆண்டி, மாரி இருவரும் எவ்வளவுதான் நல்ல நண்பர்களாக இருந்தாலும் கூட, மாரி இறக்கும் வரையிலும் ஆண்டியை மரியாதையுடன்தான் அழைத்தான்.*

***"மழ உழுந்தாத் தாங்கலாம்***
***மானமே இடிஞ்சு உழுந்துருச்சு."***

*(பூமணி, அஞ்ஞாடி- ப.956)*

*மாரியின் இறப்பிற்குப் பின் ஆண்டி நிகரில்லாமல் நடமாடினான். அவன் அதிலிருந்து மீண்டு வருவதற்குச் சில நாட்கள் ஆயின. மேலும் மாரியின் குடும்பத்திற்கு உதவிகள் பல செய்து காத்து வந்தான் ஆண்டி. மாரியின் மகன் மருதன் எதுவாக இருந்தாலும் ஆண்டியிடம் கேட்டுதான் செய்வான். மாரியைப் போல மருதனும் ஆண்டியிடம் நட்பாகப் பழகிவந்தான். எனவே இவர்களின் நட்பிற்கு எல்லையே கிடையாது. இவர்களின் நட்பு மிகவும் சிறப்பு வாய்ந்தது. அதனால் தான் இவை ஒரு தலைமுறையினரிடம் இருந்து அடுத்துத் தலைமுறைக்கும் தொடர்ந்து கொண்டே வருகிறது என்பதை உணரமுடிகிறது.*

## முடிவுரை

*ஒரு நட்பு அந்த இருவர்களுடன் முடிந்து விட்டால் அது சிறந்த நட்பாக இருக்க முடியாது. இருவரும் நண்பர்களாக இருந்தார்கள் என்று கூறலாம். ஆனால் இந்த நட்பு அடுத்த தலைமுறையினருக்கும் கொண்டுச் செல்வதுதான் ஒரு நட்பின் சிறப்பு. இந்தச் சிறப்பு ஆண்டி, மாரியின் நட்பில் தொடங்கி அடுத்த அடுத்தத் தலைமுறைக்குக் கொண்டு செல்கிறது. அதுதான் இந்தப் பாத்திரத்தின் வலிமை என்று கருதலாம்.*

## மேற்கோள்கள்


1. *பூமணி, அஞ்ஞாடி, முதல் பதிப்பு-2012*
   *க்ரியா*
   *பாரி நூல் உலகம்*
   *ஏகாம்பரநாதர் சன்னதி தெரு*
   *காஞ்சிபுரம்-631502.*
2. *கழகத் தமிழ் அகராதி*
   *முதல் பதிப்பு-1964.*

*ஜீவா புத்தகாலயம்*
*நாமக்கல்-637001.*

3. *க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி*
   *இரண்டாம் பதிப்பு-2008*
   *காமராஜர் நகர்*
   *திருவான்மையூர்*
   *சென்னை-600041.*
4. *திருவள்ளுவர், திருக்குறள்*
   *முதல் பதிப்பு-1999*
   *தென்றல் நிலையம்,*
   *சிதம்பரம்-608001.*
5. *சமண முனிவர்கள், நாலடியார்,*
   *முதல் பதிப்பு-2010*
   *சாரதா பதிப்பகம்*
   *சென்னை-600014.*
6. *மூவாதியார், ஐந்திணை எழுபது*
   *முதல் பதிப்பு-2009*
   *செல்லப்பா பதிப்பகம்*
   *மதுரை-625001.*

********* ********* ********** ********* ********* ********** ********** **********